# ANCESTRY OF MUSLIMS IN ANURADHAPURA DISTRICT: A HISTORICAL VIEW

[1]Ameer Rushana, [2]MHM.Nairoos

Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka

a.rushana94@gmail.com , nairoosmh@seu.ac.lk

**Abstract**

Anuradhapura district posses 8,60,575 population. From that total quantity minority Muslims represent 8%. 70,692 Muslims reside at 114 Muslim villages in Anuradhapura district. It is noteworthy that Muslims reside as majority at Kekirawa, Kahatagasdigiliya, Horowpothana, Nachaduwa and Ikkirikollawa. It is pathetic that Sri Lankan Muslims' history has not been compiled and analysed systermatically while comparing with other communities. It is a major shortcoming of Muslim community. So the object of the research is defining the accurate history of Anuradhapura district Muslims. In order to carryout the research effectively data have been received from tales and statements of 15 forefathers who reside at Anuradhapura town, Horowpothana, Kekirawa, Ganewalpola, Kahatagasdigiliya, Medawachi and Mihintale. Results were found based on the analysis of interviews and secondary data. Per to the historical books Anuradhapura Muslims history relates with the late king 'Pandukabaya's' reign period. Also it should be highlited that several Muslims have played multiple roles in the palaces of kings as doctors, advisors and elites.

**Key Words:** Sri Lanka, Anuradhapura district, Muslims, Ancestry

## 1. அறிமுகம்

65,610 சதுர கிலோமீற்றர் பரப்பெல்லையைக் கொண்டுள்ள இலங்கை இந்தியத் துணைக்கண்டத்தின் தென்கீழ்க் கரைக்கு அப்பால் அமையப்பெற்றுள்ள ஒரு நாடாகும். இது வட அகலாங்கு 6–10 இடையிலும், கிழக்கு நெட்டாங்கு 80–82 இடையிலும் அமைந்துள்ளது. இதன் உயர்ந்த பட்ச நீளம் தெற்கே தெய்வேந்திரமுனை தொடக்கம் வடக்கே பருத்தித்துறை வரை 432 கிலோ மீற்றர் ஆகும். பௌத்தர்கள், கிறிஸ்தவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள், மற்றும பறங்கியர்கள் வாழக்கூடிய பல்லின சமூகத்தைக் கொண்ட ஒரு நாடாக இருப்பதோடு 20,277,597 மக்கள் சனத்தொகையையும் கொண்டுள்ளது. இங்கு பெரும்பான்மையாக பௌத்தர்களும் (70.2%), முதல் சிறுபான்மையினராக இலங்கைத் தமிழர்களும் (12.6%), இரண்டாவது சிறுபான்மையினராக முஸ்லிம்களும் (9.7%), பறங்கியர்களும் (7.4%) வாழ்ந்து வருகின்றனர் (இலங்கை தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம், 2012).

இலங்கையில் நிருவாக 25 மாவட்டங்களும், 9 மாகாணங்களும் உள்ளன. அவற்றுள் பெரிய மாகாணமான வடமத்திய மாகாணத்தில் அமையப் பெற்ற ஒரு மாவட்டமாக 'அனுராதபுரம்' காணப்படுகின்றது. ஆரம்பத்தில் *அனுராதகாமம்* என அழைக்கப்பட்டது. இலங்கையை ஆண்ட பண்டுகாபய மன்னன் அனுராதகாமத்தை அனுராதபுரமாக மாற்றி அதனைத் தலைநகராக்கினான். அனுராதபுர மாவட்டமானது 7,179 சதுரகிலோமீற்றர் பரப்பெல்லையை கொண்டுள்ளது (பின்னிணைப்ப – 07). இம்மாவட்டம் ஏழு தேர்தற் தொகுதிகளையும், 22 பிரதேச செயலகப் பிரிவுகளையும், 694 கிராம சேவகர் பிரிவுகளையும் கொண்டுள்ளது. இம்மாவட்டத்தில் மொத்தமாக 860,575 மக்கள் வாழ்கின்றனர். இங்கு பெரும்பான்மையாக பௌத்தர்களும் (90.9%), ஏனையோர்

சிறுபான்மையினராக அதாவது முஸ்லிம்கள் 8.0%, இலங்கைத் தமிழர்கள் 1.0%, மற்றும் கிறிஸ்தவர்கள் 1.2% வாழ்கின்றனர். அனுராதபுர மாவட்டத்தில் 114 முஸ்லிம் கிராமங்கள் காணப்படுகின்றன. அவற்றில் 70,692 முஸ்லிம்கள் வாழ்கின்றனர். (இலங்கை தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் - அனுராதபுர மாவட்டம், 2012). அனுராதபுரத்தில் முஸ்லிம்களின் வரலாற்றை நோக்கின் அது 'பண்டுகாபய' மன்னனின் காலத்துடன் தொடர்புள்ளதாக வரலாற்று நூல்களிலிருந்து அறியக்கிடைத்தது. மேலும் முஸ்லிம்களில் பலர் சிங்கள மன்னர்களின் கீழ் அரண்மனை வைத்தியர்களாகவும், ஆலோசகர்களாகவும், பிரதானிகளாகவும், முகாம்திரன்களாகவும், மந்திரிகளாகவும் இருந்துள்ளமை தெரிய வருகிறது.

### 3. ஆய்வுப் பிரச்சினை

இலங்கை நாட்டில் பூர்வீகக் குடிகளாக முஸ்லிம்களின் மதச்சுதந்திரத்தை அடக்குகின்ற, முஸ்லிம்களின் கலாசார தனித்துவத்தை கேலிக்கூத்தாக்குகின்ற, முஸ்லிம்களின் வரலாற்றைத் திரிபுபடுத்துகின்ற கைங்கரியத்தில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒரு சிறுகுழுவினர் ஈடுபட்டு வருகின்றனர். வரலாற்றுக் காலம் தொட்டு இற்றை வரை இந்த நாட்டுக்காக தியாகம் செய்த, செய்து கொண்டிருக்கின்ற முஸ்லிம்களின் வரலாற்றைத் திரிவுபடுத்துவதில், முஸ்லிம்களை வந்தேறு குடிகளாக, வரலாறு அற்றவர்களாக சித்தரிப்பதற்காக கங்கணம் கட்டிக் கொண்டு செயற்படுகின்றனர். தன் வரலாற்றை பூர்வீகத்தை அறிந்து கொள்ள ஆவணமாக்கத்தவறும் ஒரு சமூகம் எதிர்காலத்தில் தம் இருப்பையும் அடையாளத்தையும் இழக்க ஆரம்பிப்பதை அண்மைக் கால நிகழ்வுகள் எமக்கு உணர்த்துகின்றது. அந்தவகையில், இவ்வாய்வு இலங்கையில் அனுராதபுர மாவட்ட முஸ்லிம்களின் பூர்வீகம் அழிந்து கொண்டு வருவதால் அதன் வரலாற்றைக் கண்டறிவதே இவ்வாய்வின் பிரதான நோக்கத்தில் மேற்கொள்ளப்படுகின்றது.

### 4. ஆய்வின் நோக்கம்

இலங்கை அனுராதபுர மாவட்ட முஸ்லிம்களின் வரலாறு பற்றிய இவ்வாய்வில், அனுராதபுர மாவட்ட முஸ்லிம்களின் பூர்வீகத்தைக் கண்டறிவதே இவ்வாய்வின் பிரதான நோக்கமாகக் காணப்படுகிறது.

### 5. ஆய்வு முறையியல்

ஏனைய சமூகங்களின் வரலாறுகள் முறையாகத் தொகுக்கப்பட்டு அச்சமூகங்களின் வரலாறுகள் மூல ஆதாரங்களின் அடிப்படையில் நின்று ஆய்வு செய்வது போல் இலங்கை அனுராதபுர மாவட்ட முஸ்லிம்களின் வரலாறு ஒரு தொகுப்பாக எழுதப்படாதது அச்சமூகத்திலுள்ள ஒரு குறைபாடாகும். இதன் அடிப்படையில், இவ்வாய்வு அனுராதபுர மாவட்டத்தில் வாழும் முஸ்லிம்களின் பூர்வீகம் எவ்வாறு அமையப்பெற்றுள்ளது என்பதைக் கண்டறிவதே இதன் பிரதான நோக்கமாகக் காணப்படுகின்றது. இவ்வாய்வின் நோக்கத்தை அடைந்து கொள்ளும் நோக்கில் அனுராதபுர நகரம், ஹொரவபத்தான, கெக்கிராவ, கனேவல்பொல, கஹடகஸ்திகிலிய, மதவாச்சி, மிகிந்தலை போன்ற பிரதேசங்களில் வாழும் 15 வயோதிபர்களிடம் பரவியிருந்த செவிவழிக் கதைகள், கூற்றுக்கள் என்பன மூலம் பெற்றுக்கொண்ட பண்பு ரீதியான நேர்காணல் முறை மூலமும், இரண்டாம் நிலைத் தரவுகள் மூலமும் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. நேர்காணல் மூலமும், இரண்டாம் நிலைத் தரவுகள் மூலமும் பெற்றுக் கொண்ட தகவல்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு பெறுபேறுகள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

### 6. பிரதான கண்டறிதல்களும் கலந்துரையாடலும்

இலங்கை வாழ் முஸ்லிம்களை பொதுவாக இரு குழுக்களாகப் பிரிக்கலாம். ஒரு கூட்டத்தினர் 'மூர்ஸ்' மற்றைய குழுவினர் 'மலேயர்கள் மூர்ஸ்' எனும் சொல்லானது போர்த்துக்கேய காலனித்துவ ஆட்சியாளர்களால் வழங்கப்பட்டது. இது பொதுவாக Moros எனும் பதத்திலிருந்து அதாவது பொதுவாக "அரேபியர்கள்" எனும் கருத்தினை வழங்குகிறது. ஏனெனில் இலங்கை வாழ் முஸ்லிம்கள் தம்மை பொதுவாக "அரேபிய வர்த்தகங்களின்" சந்ததியினர்களாகவே அடையாளப்படுத்திக் கொள்கின்றனர். மலேயர்கள் ஜாவா மற்றும் மலேசியன் வலைகுடா பிரதேசங்களிலிருந்து தோற்றம் பெற்றவர்கள். இவர்கள் காரணித்துவ ஆட்சிக்காலத்தின்

போது வரவழைக்கப்பட்டவர்கள். பொதுவாக இவ்விரு குழுவினர்களும் பௌதீக தோற்றம் மற்றும் மொழிவழக்கு என்பவற்றிலிருந்து வேறுபடுகின்றன.

முதலாம் நூற்றாண்டில் ரோமர்கள் இலங்கைக்கு வர்த்தக ரீதியிலான பெறுமதியை கண்டறிந்தனர். இலங்கையானது கிரேக்கர்கள், ரோமர்கள், பாரசீகர்கள், அரேபியர்கள் மற்றும் சீன வர்த்தகர்கள் வருகைக்கு உட்பட்டிருந்தது. இவர்களில் அனேகமாக அரேபியர்களைத் தவிர மற்ற அனைவரும் இலங்கைக்கு வந்து சென்றனர். ஆனால் அரேபியர்கள் மாத்திரம் இலங்கையை தமது இல்லமாக மாற்றினர். இலங்கையில் இஸ்லாம் விருத்தியடைதல் முறையானது அனேகமாக இந்தியாவின் ‘‘மலபார் கரை’’ ஒத்ததாகவே காணப்பட்டது. பாரம்பரிய பதிவேடுகளின் பிரகாரம் மலபார் கரைகளில் குடியேரிய அரேபியர்கள் ‘‘கிரன்கனோர்’’ துறைமுகத்திலிருந்து இலங்கைக்கு யாத்திரர்களாக ‘‘முதல் மனிதன் ஆதம்மின்’’ காலடிச்சுவடு காணப்படும் மலையின் உச்சியை நோக்கி வந்துள்ளனர்.

7ம் நூற்றாண்டு முடிவடைவதற்கு முன்பே முஸ்லிம் வணிகர்கள் தமக்கான குடியிருப்பாக இலங்கையை அமைத்துக் கொண்டனர். சுதேச ஆட்சியாளர்களாலும், மக்களாலும் கவரப்பட்ட முஸ்லிம் வர்த்தகர்கள் கரையோரப்பகுதிகளில் தமது குடியேற்றங்களை அமைத்து கலாசார மற்றும் வர்த்தக ரீதியிலான தொடர்புகளை பக்தாத் மற்றும் ஏனைய இஸ்லாமிய நகர்களுக்கும் பேணி வந்தனர். இலங்கைக்கு வந்த குழுவினர் குறிப்பாக எட்டு குடியிருப்புக்களாக வட மற்றும் வட மேல் மாகாணங்களில் குடியமர்ந்தனர்.

**அனுராதபுர நகரம்**

அனுராதபுரம் நகரமானது ‘‘அனுராத’’ என்பவனால் (விஜய மன்னனுடன் வந்த அமைச்சர்களில் ஒருவன்) கி.மு.437ல் கண்டுபிடிக்கப்பட்டது. அனுராதபுரத்தில் முஸ்லிம்களின் வரலாற்றை நோக்கின் அது ‘‘பண்டுகாபய’’ மன்னனின் காலத்துடன் தொடர்புள்ளதாக வரலாற்று நூல்களிலிருந்து அறியக்கிடைத்தது. அரேபியர்கள் வருகை அல்லது அவர்கள் தொடர்பாக இலங்கையின் ஏற்றுக் கொள்ளக்கூடிய சான்றாக ‘‘மகாவம்ச’’ எனும் (இலங்கையின் புராதன வரலாற்றைக்கூறும் நூல்) பௌத்தத்துறவியால் எழுதப்பட்ட நூலில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. ‘‘இலங்கையின் நான்காவது மன்னனான ‘‘பண்டுகாபய மன்னன் தனது தலைநகராக அனுராதபுரத்தினை கி.மு.4ம் நூற்றாண்டில் அமைத்துக் கொண்டான். மன்னன் தனது திட்டமிட்ட நகரத்தில் ‘‘யோனக’’ எனும் மேற்காசிய பிராந்தியத்திலிருந்து வந்த குறிப்பிட்ட ஒரு சமூகத்தினருக்காக ஒரு பகுதியை வடிவமைத்தான்.’’ இதில் யோனக என்ற சொல்லானது அரேபியர்களை (முஸ்லிம்களை) குறிக்கும் சொல்லாகவே வரலாற்று ஆசிரியர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வகையில் நோக்கினால், அனுராதபுரம் முஸ்லிம்களின் வரலாறானது பண்டுகாபய மன்னனின் காலத்திலிருந்து நோக்கப்பட வேண்டியதொன்றாக காணப்படுகிறது. ஏற்கனவே கூறப்பட்டது போன்று பல்வேறு நாடுகளிலிருந்தும் இலங்கைக்கு வந்த அரேபியர்கள் இலங்கையின் வடமேற்கு, மேற்கு கரைகளான சிலாவத்துறை, புத்தளம், கற்பிட்டி போன்ற இறங்கு துறைகளில் வந்திறங்கியுள்ளனர். இவ்வாறு அன்று முத்துச்சிலாபம் என்றழைக்கப்பட்ட சிலாபத்துறை மூலமாக வந்தபோது உள்நாட்டுக்குள் நுழையும் பாதையை அனுராதபுரத்தின் ஊடான ஏற்படுத்திற்கொண்டனர். சிலாவத்துறையில் இருந்து தந்திரிமலைப்பிரதேசம், திசாவெவகம, ஆமன்னரத்மல, எந்தகல, கலாவெவ போன்ற இடங்கள் ஊடாகவும், புத்தளம், கற்பிட்டிதுறை மூலமாக வந்தவர்கள் அனுராதபுரம் ஊடாக, கலகெதர, மடிகே ஊடாகவும், நேகம, கலாவெவ ஊடாகவும் மலைநாட்டிற்கு பயணங்களை மேற்கொண்டிருந்ததாக அறிய முடிகிறது. (ஹுஸைன், 1992)

இவ்வகையில் பிற்கால முஸ்லிம் குடியிருப்புக்களாக கச்சுத்தோட்டம், இசுறுமுனி, வெஸ்ஸகிரிய, ஒட்டுப்பள்ளம், திசாவெவகுளம் அமைந்துள்ள இடம் அன்று திஸாவெவகம என்று அழைக்கப்பட்டிருந்தது. இக்கிராமத்தின் நடுவே அமைந்திருந்த பள்ளிவாசலை சிதைவடைந்த நிலையில் இன்றும் காணமுடிகிறது. தலைநகரம் அனுராதபுரத்திலிருந்து பொலன்னறுவைக்கு மாற்றமடைந்ததைத் தொடர்ந்து அனுராதபுரம் சேதமுற்ற வனப்பகுதியாக மாற்றமடைகிறது. கண்டிய ராஜ்யத்தில் அனுராதபுரமானது வெகு தொலைவிலுள்ள அடர்த்திக்

குறைந்த குடித்தொகையுடனான பிரதேசமாகவே கணிக்கப்பட்டதுடன் இது ''நுவரகலாவிய'' எனும் பெயரால் அழைக்கப்பட்டது. அனுராதபுரத்திலிருந்து ஆட்சி மாற்றம் ஏற்பட்டதிலிருந்து பிரித்தானியர்கள் அங்கு சில திட்டங்களை முன்னெடுக்கும் காலப்பகுதி வரை அனுராதபுரம் தொடர்பாக அல்லது அங்கிருந்த விகாரைகள் மற்றும் புண்ணியஸ்தலங்களில் யார் வாழ்ந்தனர், எவ்வகையான மக்கள் இங்கு வாழ்ந்தனர் போன்ற விடயங்கள் தொடர்பான, எழுதப்பட்ட தகவல்கள் இல்லையென்றே கூறப்படுகின்றது. எனவே, இக்காலப்பகுதியில் அனுராதபுரமானது எவ்வித செல்வாக்குமற்ற ஆட்சியாளர்களினால் கவனிக்கப்படாத பிரதேசமாகவே காணப்பட்டுள்ளது.

இதற்கு சிறந்த சான்றாக 1803ம் ஆண்டில், இளவரசன் ''முத்துசாமி'' (இராஜாதிமன்னனின் மைத்துனன்) ஆட்சிக்காலத்தில் பிரித்தானியர் தமது உதவி தேவைகளுக்காக ''சப்ரகமுவ'' பிரதேசத்தை வேண்டி நின்றபோது அதற்கு இளவரசன் மறுப்பு தெரிவித்தான், ஏனெனில் அப்பிரதேசம் குறிப்பிட்டளவு வருவாயை பெற்றுத்தந்தது மற்றும் பௌத்தர்களின் முக்கிய இடமாக விளங்கிய "Sripada" வை இழக்க நேரிடும் என்பதற்காகவாகும். ஆனால், இளவரசன் அதற்கு மாற்றுத்திட்டமாக நுவரகலாவிய தற்போதைய வடமத்திய பிரதேசத்தை எடுத்துக்கொள்ளும்படி யோசனையை முன்வைத்தான். இதன் மூலம் அக்காலத்தில் அனுராதபுரம் எந்தளவிற்கு மத்திய அரசின் பார்வையில் பின்தங்கிய பிரதேசமாக மாத்திரமன்றி மதரீதியிலும் செல்வாக்கற்ற பிரதேசமாக நோக்கப்பட்டது. (Pradeep Jayananthan 1995.P-117)

பிரித்தானியர்கள் அனுராதபுரத்தில் தமது நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முன்பே அனுராதபுரத்தில் முஸ்லிம்கள் வாழ்ந்தனர் என்பதற்கு மற்றுமொரு சான்றாக levers, 1899யில் எழுதிய நூலில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். 1833 காலப்பகுதியில் திஸாவெவ குளத்தின் படுக்கையில் இரண்டு கிராமங்கள் காணப்பட்டன. ஒன்று சிங்கள கிராமம், மற்றையது முஸ்லிம் கிராமம். 1845-1850 காலப்பகுதியில் திஸாவெவ புனரமைப்பிற்கு உட்பட்ட பொழுது இக்கிராமங்கள் மறைந்து போயின. ஆனால், 1870 வரை பள்ளிவாயில் காணப்பட்டது. (Levers R.W.1899.P-54) Levers யினால் குறிப்பிடப்பட்ட இக்கிராமங்கள் இரண்டும் அனேகமாக Robert Knox தனது இலங்கை தொடர்பான அனுபவங்களைப் எழுதி 1681ல் வெளியிடப்பட்ட "An Historical Relation of the Island Ceylon" எனும் நூலில் குறிப்பிடப்பட்ட கிராமங்கள் என்றே கருதப்படுகின்றன. அது அவ்வாறு இருப்பின் பிரித்தானியர்களின் வருகைக்கு முன்பே அனுராதபுரத்தில் முஸ்லிம் கிராமம் காணப்பட்டது என்பதற்கு இதனை ஒரு சிறந்த சான்றாகக் கருதலாம்.

பிற்பட்டகாலத்தில் இலங்கையை ஆண்ட ஆங்கிலேயர்கள் கி.பி.1870ஆம் ஆண்டு காலப்பகுதியில் திஸ்ஸவெவ குளம், கலாவெவ குளம், நாச்சியாதுவ குளம் போன்றவற்றைப் புனரமைப்பு செய்ய முற்பட்டனர். இதனால் திஸ்ஸவெவகம, பொன்னாரங்குளம், கும்பிச்சம் குளம், ஆமனவெவ, நாச்சியாதுவ, கலாவெவ போன்ற இடங்களில் நிரந்தரக்குடியிருப்புகளை விட்டும் வெளியேற்றப்பட்டன. குறிப்பாக பிரதான குடியிருப்பாகவிருந்த திஸ்ஸவெவகம கிராம மக்கள் குடிபெயர்ந்து இதனையடுத்திருந்த உடமளுவ, இசுறுமுனி, திஸாவெவ கீழ்க்கரை, (கி.பி.1882, 1886) போன்ற இடங்களில் குடியிருப்புக்களை ஏற்படுத்தினர். (ஹுஸைன்,1992)

அனுராதபுரம் முஸ்லிம்கள் தொடர்பாக ஆராய்கையில் கருத்திற்கொள்ளப்பட வேண்டிய மற்றுமொரு முக்கிய அடையாளமாக ''ஒட்டுப்பள்ளம் தர்கா'' அல்லது ''சேகு சிக்கந்தர் வொலியுள்ளாஹ்'' அடக்கம் செய்யப்பட்ட இடம் காணப்படுகிறது. இந்தியாவிலிருந்து ஆன்மீகப் பணிக்கென இலங்கைக்கு வந்து இவர் அனுராதபுரத்தில் மரணமானார். இவர் இறையடியெய்தியதும் அரசன் ஆணைப்படி அரண்மனையை அண்மித்ததாக அவரது ஜனாஸா அடக்கம் செய்யப்பட்டதாகவும், அவர் அடக்கப்பட்ட இடம் அன்று பிரதான மக்கள் குடியிருப்பாகவிருந்த ''ஒட்டுப்பள்ளம்'' என்ற இடத்தை அண்மியதாக இருந்தது என்று கூறப்படுகிறது. (ஹுஸைன்,1992). இதில் கவனிக்கப்பட வேண்டிய இடம் யாதெனில் இவர் எக்காலப்பகுதியில் அனுராதப்புரத்திற்கு வந்தார்? அக்காலப்பகுதியில் அனுராதப்புரத்தில் காணப்பட்ட சமூக, கலாசார பின்னணி எவ்வாறு காணப்பட்டது? குறிப்பாக இன்று புனித நகர பிரதேசமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள புவியியல் பிரதேசத்தின் முக்கிய பகுதியில் இவர் அடக்கம் செய்யப்பட்டமைக்கான காரணம்? மற்றும் அக்காலத்திலும்

இப்பிரதேசம் இன்று கூறப்படுவது போல் முக்கியத்துவம் பெற்றிருப்பின் அன்று வாழ்ந்த பௌத்த மக்கள் இதனை அங்கீகரித்தமைக்கான அல்லது எதிர்ப்பு தெரிவித்தமைக்காக காரணம் என்ன? போன்ற வினாக்களுக்கான விடை இன்னும் புரியாத புதிராகவே உள்ளது.

**முடிவுரை**

அனுராதபுர மாவட்டத்தில் 114 முஸ்லிம் கிராமங்கள் காணப்படுகின்றன. அவற்றில் 70,692 முஸ்லிம்கள் வாழ்கின்றனர். கெக்கிராவை, கஹட்டகஸ்திகிலிய, ஹொரவபத்தான, நாச்சியாதீவு, இக்கிரிகொல்லாவை ஆகிய கிராமங்களில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக செறிந்து வாழ்கின்றனர். ஏனைய சமூகங்களின் வரலாறுகள் முறையாகத் தொகுக்கப்பட்டு அச்சமூகங்களின் வரலாறுகள் மூல ஆதாரங்களின் அடிப்படையில் நின்று ஆய்வு செய்வது போல் இலங்கை அனுராதபுர மாவட்ட முஸ்லிம்களின் வரலாறு ஒரு தொகுப்பாக எழுதப்படாதது அச்சமூகத்திலுள்ள ஒரு குறைபாடாகும். அதனை நிவர்த்தி செய்வதற்காகவே இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில், இவ்வாய்வு அனுராதபுர மாவட்டத்தில் வாழும் முஸ்லிம்களின் பூர்வீகம் எவ்வாறு அமையப்பெற்றுள்ளது என்பதைக் கண்டறிவதே இதன் பிரதான நோக்கமாகக் காணப்படுகின்றது. இவ்வாய்வின் நோக்கத்தை அடைந்து கொள்ளும் நோக்கில் அனுராதபுர நகரம், ஹொரவபத்தான, கெக்கிராவ, கனேவல்பொல, கஹடகஸ்திகிலிய, மதவாச்சி, மிகிந்தலை போன்ற பிரதேசங்களில் வாழும் 15 வயோதிபர்களிடம் பரவியிருந்த செவிவழிக் கதைகள், கூற்றுக்கள் என்பன மூலம் பெற்றுக்கொண்ட பண்பு ரீதியான நேர்காணல் முறை மூலமும், இரண்டாம் நிலைத் தரவுகள் மூலமும் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் முஸ்லிம்களில் பலர் சிங்கள மன்னர்களின் கீழ் அரண்மனை வைத்தியர்களாகவும், ஆலோசகர்களாகவும், பிரதானிகளாகவும், முகாம்திரன்களாகவும், மந்திரிகளாகவும் இருந்துள்ளமை தெரிய வருகிறது. எனவே, இனிவரும் ஆய்வாளர்களுக்கோ, சமூக தலைவர்களுக்கோ இவ்வாய்வு பயன்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## References


1. Lional Perera K,(1987) , *"Brahmachari walisinha Harischandra*", Divesa Publishers, Colombo.
2. Manfred Domroes and Helmat Roth,(1998), "*Srilanka past and present:Geography and Economy",* Marga Institute, Srilanka
3. Michael Roberts, (1997),*"Srilanka: Collective Identities*", volume-1, Marga Institute, Srilanka.
4. "*அனுராதபுர மாவட்ட முஸ்லிம்கள்*", (1992), வெளியீடு: முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள், இராஜாங்க அமைச்சர் அலுவலகம், கொழும்பு 2, இலங்கை.
5. பழீல்,எஸ்.எச்எம்., *"இலங்கை முஸ்லிம்களின் சகவாழ்வு*' , 'இஸ்லாமிய சிந்தனை' (2007) மலர்-29, இதழ்-01, (ஜனவரி-மார்ச்), C , நளீமிய்யா இஸ்லாமிய வெளியீட்டுப் பணியகம். பு-14-18
6. காலிதீன்,கே.எம்.எச்., (1986), *"இலங்கை முஸ்லிம்களின் வரலாறு*", அகில இலங்கை கதீப்மார்கள் சம்மேளனம்.
7. அர்ஷாட்,எஸ்,எல்,எம்., (2013), "இலங்கை சோனகர்களின் பூர்வீகம்: மறைக்கப்பட்ட உண்மைகள;" [Online] available : http://www.importmirror.com/2013/08/blog-post_4649.html?m=1 [Accessed] : [05.09.2019]
8. ஹுஸைன்,ஏ.பி,எம்., (2012), *"அனுராதபுரத்தின் முதுசொம்"* ஓய்வுபெற்றவர்களை கௌரவிக்கும் விழா மலர்.
9. Department of Census and Statistics-Sri Lanka (2012). Statistical Abstract of the Democratic Socialist Republicof Sri Lanka. Department of Census and Statistics-Sri Lanka, Colombo, Sri Lanka. [Online] [Accessed: 05.09.2019] .

http://www.statistics.gov.lk/districtstathbook.asp?district=anuradhapura

10. Anuradhapura District Map [Accessed] : [05.09.2019]
https://goo.gl/images/WqaLDi